# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## கலை கலாசார பீடம்

## இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டு பொதுக் கலைமாணித் தேர்வு

## 2016/2017 (December 2019)

**GY 2212 மானிடப் புவியியல் (Human Geography)**

நேரம்: 02 மணித்தியாலங்கள்

எழுத்து தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்

பகுதி I இல் இருந்து இரண்டு வினாக்களையும் பகுதி II இல் இருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக **நான்கு** வினாக்களுக்கு விடை தருக.

---

## பகுதி I

1. அ) வளம் என்ற பதத்தினை வரையறை செய்க. (03 புள்ளிகள்)

   ஆ) இயற்கை வளங்களை வகைப்படுத்தி அவற்றை சுருக்கமாக விளக்குக. (07 புள்ளிகள்)

   இ) அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் இயற்கை வளங்களைப் பெற்றுக்கொள்வதில் எதிர்நோக்கிவரும் சவால்களை உதாரணங்களுடன் ஆராய்க. (15 புள்ளிகள்)

2. அ) கைத்தொழில் என்ற பதத்தினை வரைவிலக்கணப்படுத்துக. (03 புள்ளிகள்)

   ஆ) உலகின் பிரதான கைத்தொழில் வலயங்களைக் குறிப்பிட்டு, சுருக்கமாக விளக்குக. (08 புள்ளிகள்)

   இ) அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் கைத்தொழிலின் அண்மைக்காலப் போக்குகளை யாதாயினும் ஒரு பிராந்தியத்தினை முன்னுதாரணமாகக் கொண்டு புள்ளிவிபரங்களுடன் ஆராய்க. (14 புள்ளிகள்)

3. அ) நகரமயமாக்கம் என்பதால் கருதப்படுவது யாது? (03 புள்ளிகள்)

   ஆ) நகரமயமாக்கத்தால் கிராம மற்றும் நகரங்களில் ஏற்படும் நன்மையான மற்றும் தீமையான மாற்றங்களைச் சுருக்கமாக விபரிக்குக. (10 புள்ளிகள்)

   இ) நகரமயமாக்கத்தால் ஏற்படும் சூழலியல் மற்றும் சமூக பிரச்சினைகளை உதாரணங்களுடன் விளக்குக. (12 புள்ளிகள்)

## பகுதி II

4. உலக குடித்தொகைப் போக்கினை குடித்தொகை நிலைமாறல் கோட்பாட்டுடன் (Demogra[p] Transition Theory) தொடர்புபடுத்தி ஆராய்க. (25 புள்ளிகள்)

5. விவசாயத் துறையினை விருத்தி செய்வதில் இலங்கை எதிர்கொள்ளும் தொழில்நுட்ப ரீதிய சவால்களை ஆராய்க. (25 புள்ளிகள்)

6. பின்வருவனவற்றுள் யாதாயினும் **இரண்டினிற்கு** விளக்கக் குறிப்புரை எழுதுக.

   அ) மானிடப் புவியியலின் நவீன வளர்ச்சிப் போக்கு

   ஆ) சர்வதேச வர்த்தகத்தை மேம்படுத்துவதில் போக்குவரத்து துறையின் பங்களிப்பு

   இ) உலக தொடர்பாடல் துறையின் விருத்தியும் தாக்கங்களும்

(2x12½ = 25 புள்ளிகள்